

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, வார்டு 37 உதயசூரியன் நகர் பின்புறம் உள்ள குடிசை பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 20க்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் எரிந்ததை தொடர்ந்து தீயில் எரிந்த சான்றிதழ்கள் பெறுவதற்கான முகாமை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக ரொக்கம் ரூ.5000/– மற்றும் அரிசி, போர்வை, துண்டு, பாய், புடவை, லுங்கி, பக்கெட், மக்(MUG) சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன், பகுதி செயலாளர் அ. முருகன், எஸ்.ஆர். கமலக்கண்ணன், வட்ட செயலாளர் கே.இ. செந்தமிழரசு, சி.எஸ்.ரவி, ஏ.ஜியா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி, 100 ஆவது வட்டத்தில் ஆர்ம்ஸ் சாலையில் புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி ரூ.25,54,000 திட்ட மதிப்பீட்டில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டது. இதில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் ச.பரமசிவம், வட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, மே 28-

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை (29.5.2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எனது தலைமையில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் லயலோ. கே.மதன், வை.கௌதமன், இர.பொன் இளவரசன், கட்பீஸ்.ப. சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் பகுதியை சார்ந்த பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



மதுரவாயல் தெற்கு பகுதி 152வது வட்ட பாக நிலை முகவர்கள் மற்றும் பாக நிலை குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் வளசரவாக்கம் குகா மஹாலில் வட்ட பொறுப்பாளர் எம்.டி.சி ஜெ.பாஸ்கர் ஏற்பாட்டில் பகுதி கழக துணை செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான ச.பாரதி அண்ணாவேலவன் முன்னிலையில் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., தொகுதி தேர்தல் பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல்!

## இந்திய தேர்தல் ஆணையம் அட்டவணை வெளியீடு!

புதுடெல்லி, மே 28-

தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலம் 24.07.2025 முடிவடைவதைத் தொடர்ந்து ஏற்படும் காலி இடங்களை நிரப்புவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் தேர்தல் கால அட்டவணையை வெளியிட்டுள்ளது:

தேர்தல் அறிவிக்கையை வெளியிடும் நாள் மற்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள்: 2.6.2025 (திங்கட்கிழமை),

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்: 09.06.2025 (திங்கட்கிழமை),

வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் நாள் : 10.6.2025 (செவ்வாய்க்கிழமை),

வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்: 12.6.2025 (வியாழக்கிழமை),

வாக்குப் பதிவு நாள்: 19.6.2025 (வியாழக்கிழமை),

வாக்குப் பதிவு நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை,

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள்: 19.6.2025 (வியாழக்கிழமை) மாலை 5 மணி முதல்,

தேர்தல் நடவடிக்கைகள் முடிவுறும் நாள்: 23.6.2025 (திங்கட்கிழமை).

இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் கூடுதல் செயலாளரை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் இணைச்செயலாளரை உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும் நியமனம் செய்துள்ளது. வேட்பு மனுக்களை பிற ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ தலைமைச் செயலகத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 02.06.2025 முதல் 09.06.2025 வரை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, 1881ஆம் வருட செலாவணி முறிச் சட்டத்தின்கீழ் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள 07.06.2025 (பக்ரீத் பண்டிகை) மற்றும் 08.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) தவிர, பிற நாட்களில் தாக்கல் செய்யலாம். வாக்குப் பதிவு, தேவைப்படின், “சட்டமன்ற குழுக்கள் அறையில்” 19.06.2025 அன்று நடைபெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையர் மலை ஒன்றியம் இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். ஐயப்பன் ஏற்பாட்டில் திரிசூலம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. ரவி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டுபோட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கலைஞர் கோப்பை ரொக்கமாக முதல் பரிசு ரூ.20 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.15 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ10 ஆயிரம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள். அப்பொழுது ஒன்றிய கழகம் நிர்வாகிகள் திரிசூலம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி
கிழக்கு ஒன்றியம் - சுண்ணாப்புகுளம் பெரிய குப்பம்
மீனவர் கிராமத்திற்கு கனவு திட்டமான படகு நிறுத்தும்
கால்வாய், மீன் உளர் களம், மீன் வலையின் கூடம்,
மீன் ஏலம் வணிக கூடம், நவீன கழிப்பிடம் வசதி
ஆகிய திட்டங்களை மீனவர்கள் பயன்பாட்டிற்கு வழங்கி
காணொலி வாயிலாக திறந்து வைக்கும்
உலகத்தர சாதனை மேல் சாதனைகள் செய்யும்
கழகத்தலைவர் மாண்புமிகு.
தமிழ்நாடு முதல்வர்
அவர்களுக்கும்
இதற்கு உறுதுணையாக இருந்த
கழக இளைஞர்அணி செயலாளர் மாண்புமிகு. தமிழ்நாடு துணை முதல்வர்
இளைய தலைவர்
அவர்களுக்கும்
மாண்புமிகு. அனிதா ராதாகிருஷ்ணன்
மீன்வளம் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர்
மாண்புமிகு. ஆவடி சா.மு.நாசர்
சிறுபான்மை நலன் (ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச்செயலாளர்
வல்லூர். MSK.ரமேஷ் ராஜ்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்
அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை
தெரிவித்துக் கொள்கிறோம்...
அன்புடன்.
நா.பரிமளம்
ஒன்றிய கழகச் செயலாளர்
கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய தி.மு.க - திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்.